விலை: சதம் 60

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆனி 15 ஷஃபான் 26 இதழ் 135
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 29-6-1981

யாழ். அபிவிருத்திச்சபை தேர்தல்:

# தமிழ்க் காங்கிரஸ் வழக்குத் தாக்கல் செய்யாது!

## தலைவர் அறிவிப்பு

[யாழ்ப்பாணம்] யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திசபை தேர்தலை ஆட்சேபித்து தமிழ் காங்கிரஸ் வழக்கு தாக்கல் செய்ய மாட்டாது என்று தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலை ஆட்சேபித்து வழக்கு தாக்கல் செய்வதென தமிழ்காங்கிரஸ் செயற்குழு கடந்தவாரம் தீர்மானித்திருந்தது தெரிந்ததே.

தமிழ் காங்கிரஸ் ஆட்சேப வழக்கை தாக்கல் செய்யாது என்று தற்பொழுது தமிழ் காங்கிரஸ் தலைவர் தெரிவித்திருக்கிறார். [s]

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த வன்செயல்கள்:

# "ஜனநாயக நாட்டில் எங்குமே நிகழக்கூடாதது!"

# இந்திய எம்.பி. கண்டனம்

## "எதிர்க்கட்சி தலைவர்மீதான பிரேரணை விந்தையானது"

(நமது நிருபர் எஸ். மகாலிங்கசிவம்)

"இந்தியா வெளிநாட்டு விவகாரங்களில் பொதுவாகத் தலையிடுவதில்லை. ஆனால் தனி மனிதனின் அல்லது சமுதாயத்தின் மனித கௌரவம், தனிநபர் சுதந்திரம் வாக்குரிமை ஆகியவற்றுக்கு உலகில் எப்பகுதியிலாவது அபாயம்நேர்ந்தால் ஒரு ஜனநாயக நாடு கட்டாயமாக உதவ முன்வர வேண்டும். இவ்வித முயற்சி மேற்கொள்ளப்படாத பட்சத்தில் ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் மனித உரிமை பற்றிப்பேசுவதில் அர்த்தமில்லை. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்செயல்கள் ஜனநாயக நாட்டில் எங்குமே நிகழக் கூடாதவை"

இவ்வாறு, இந்தியப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. குசுமா கிருஷ்ணமூர்த்தி, "ஈழநாடு" பத்திரிகைக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் கண்டனம் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற பொதுநல அமைப்பு கருத்தரங்கில் கலந்துகொண்ட திரு. கே கிருஷ்ணமூர்த்தி, ஆந்திரப்பிரதேசத்திலுள்ள அமலபுரம் தொகுதியின் [இந்தியப் பாராளுமன்ற]எம். பி யாகும். இவர், இந்திரா காங்கிரஸை சேர்ந்தவர்.

திரு. கிருஷ்ணமூர்த்தி நேற்று தாயகம் திரும்புமுன்னர், லங்கா ஓபரோய் ஹோட்டலின் மேற்படி சிறப்புப் பேட்டி அளித்தார். அவர் மேலும் கூறியதாவது:

"மனிதத்துவம், சுதந்திரம், சட்டம், ஒழுங்குமுறை என்று ஒருபுறம் பேசிக்கொண்டு, மறுபுறம் இவற்றுக்கு முரணாக செயல்படுவது, என்னைப் பொறுத்தவரை ஏற்றுக் கொள்ள முடியாத காட்டுமிராண்டித்தனமான செயலாகும்"

"இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பிரச்னை

[6-ம் பக்கம் பார்க்க]

சீன-இந்திய எல்லைத் தகராறு:

## பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க இணக்கம்

### சீனாவுக்கு வருமாறு இந்திராவுக்கு அழைப்பு

புதுடில்லி, ஜூன் 28 இந்தியாவும், சீனாவும் எல்லைத் தகராறுகளைப பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைக்க இணங்கியுள்ளன என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி. இந்தியாவுக்கு விஜயஞ்செய்துள்ள சீன் வெளிநாட்டமைச்சர் திரு. குவா-குவாங்குடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து நிருபர்களிடம் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில், "1962ம் ஆண்டு இந்தியாவிற்கும், சீனாவிற்குமிடையே எல்லைச் சண்டை நடைபெற்றது. இந்திய-சீன எல்லைத் தகராறுகளைத் தீர்க்கும் வழிவகைகள் பற்றி இந்திய அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது இந்தியா அதன் எந்தவொரு பிரதேசத்தையோ பகுதியையோ இழக்கத் தயாரில்லை." என்ருர்.

[6-ம் பக்கம் பார்க்க

# யாழ். நகரில் மலேசிய எம்.பி.

## இன்று மேயரை சந்திப்பார்

[யாழ்ப்பாணம்] கொழும்பில் நடைபெற்ற பொதுநல அமைப்புக் கருத்தரங்கில் கலந்துகொண்ட மலேசியப் பாராளுமன்ற அங்கத்தவர் திரு. அ. பொன்னையா, நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்தார்.

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த வன்செயல்களில் பாதிக்கப்பட்ட சில இடங்களைப் பார்வையிட்ட திரு. அ. பொன்னையா, யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. எஸ். நடராசாவை நேற்றுச் சந்தித்து, இங்குள்ள நிலைமை பற்றி விரிவாகத் தெரிந்துகொண்டார்.

இன்று காலை மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதனை சந்திக்கும் திரு. அ. பொன்னையா, யாழ். நகரில் தீக்கிரையான பொதுசன நூலகம், நவீன சந்தை மற்றும் சில இடங்களையும் பார்வையிடுவார்.

## பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் பலி!

[யாழ்ப்பாணம்]

பஸ்-மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய வாலிபர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். இவர் அடுத்த மாதம் உயர் படிப்புக்காக வெளிநாடு செல்லவிருந்தாராம்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்துக்கு அண்மையிலேயே இவ்விபத்து இடம் பெற்றது.

பூநகரியைச் சேர்ந்த ஸ்ரீவிக்னேஸ்வரன் [வயது 19] என்னும் இளைஞரே இவ்விபத்தில் பலியானவராவர்.

இவர், நேற்று முன்தினம்

[6ம் பக்கம் பார்க்க]

யாழ்ப்பாணம்—தலைமன்னார் பிரயாணிகளுக்கு

## வாணர்சன்ஸ் ரவல்ஸ்

நடாத்தும்

தலைமன்னார் — இராமேஸ்வரம்

கப்பல் - பஸ் இணைப்புச் சேவை

யூலை மாதம் முதலாம் திகதி முதல்
(1-7-81) ஆரம்பிக்கப்படவுள்ளது
ஒவ்வொரு திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் கீழ்க்கண்ட நேர சூசிப்படி செயலாற்றப்படும்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் புறப்படல் காலை 9-30 | தலைமன்னார் சென்றடைதல் மாலை 4-15 |
| தலைமன்னாரிலிருந்து புறப்படல் இரவு 10-00 | யாழ்ப்பாணம் வந்தடைதல் அதிகாலை 4-00 |

யாழ்ப்பாணம் — தலைமன்னார்
பகல் சேவைக்கட்டணம்: ரூபா 30-00
தலைமன்னார் — யாழ்ப்பாணம்
இரவு சேவைக் கட்டணம்: ரூபா 60-00

கப்பலில் வரும் பிரயாணிகளை யாழ் மாநகரசபை எல்லைக்குள் அவர்களின் இல்லங்களில் விடப்படும்.
உங்கள் ஆசனங்களை கீழ்க்கண்ட இடங்களில் முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளலாம்.

1. அம்பலவாணர் அன் சன்ஸ்
(கடைத்தெரு பிள்ளையார் கோவில் முன்பாக)
196, கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8291

2. ஸ்ரீ ச யி ஸ்ரோர்ஸ்
நவீனசந்தை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சுபாஸ்கபேக்கு முன்பாக) தொலைபேசி: 660

குறிப்பு:
1. அட்டவணை இடப்படாத நாட்களில் விசேட கப்பல்-சேவையிருந்தால் அந்நாட்களில் விசேட பஸ் சேவை நடாத்தப்படும்.
2. பிரத்தியேக வாடகைகளுக்கும் எமது பஸ் வண்டிகள் விடப்படும்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

## அம்பலவாணர் அன் சன்ஸ்

(பிரபல பேப்பர், ஸ்ரேசனறி, மின்சார உபகரண விற்பனையாளர்கள்)
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தந்தி: வாணர்சன்ஸ் தொலைபேசி: 8291

# வரி விளம்பரம்

## குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்கு

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்திற்குச் சொந்தமான பழுதடைந்த நிலையிலுள்ள மண்ணெண்ணெயில் இயங்கும் "சிங்கர் குளிர்சாதனப் பெட்டியை விற்பனை செய்வதற்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் "பொது முகாமையாளர், கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி" என்னும் முகவரிக்கு 10-07-81க்கு பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கிழமை நாட்களில் பொது முகாமையாளரின் முன் அனுமதியுடன் குளிர்சாதனப் பெட்டியைப் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்

கரவெட்டி,
5-06-81 0138

## விற்பனைக்கு

ஆடி 1ம், 2ம் திகதிகளில் பெரியமடுமாதா கோவில் திருவிழாவை முன்னிட்டு மடு றோட்டில் மில்க்வைற் தயாரிப்புகள் யாவும் சரைய விற்பனையுடன் அன்பளிப்புக்களும் வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புகளின் பேழுறைகள் சேகரித்து வைத்திருப்போர் எமது விளம்பர வாகனத்தில் கொடுத்து பெறுமதி வாய்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். 0143

WANTED

Wanted Saies Representatives to sell A new Consumer It m in Jaffna 48, Hospital Road, Koddady, Jaf na 0155

## விற்பனைக்கு

இரண்டு குதிரை வலுவுள்ள (Breok) தண்ணீரிறைக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு நேரில் பார்த்து விலை மதிக்கவும் திரு. க. சுதாகரன், 37/12, முதலாம் ஒழுங்கை, பிறவுண் ரோடு, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 0158

வண்ணார்பண்ணை - பிரப்பன்குளம் வீதியில் நல்ல சுற்றாடலில் உள்ள 1 1/2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும் 3/9, பிரப்பங்குளம் லேன், யாழ்ப்பாணம். தொலைபேசி: 7070, 8186 [0141]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# WETTABLE POWDER

# Ramrod® 65

HERBICIDE BY Monsanto

## வெங்காயக் களைக்கொல்லி




1/2 ரு. - 8 அவு. (2 பால்பேணி நிரம்பிய அளவு) ரும்ரொட் 65, 3 கலன் நீரில் கலந்து தெளிக்கவும்.

ரும்ரொட் 65; 45 நாட்களுக்கு மேல் வெங்காயக் களைகளைக் கட்டுப்படுத்தும் என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

ரும்ரொட் 65 வெங்காயம் புதைத்து 3 தினங்களுக்கிடையில் பாவிக்கவும்

அக்றிகோலாஸ்

கொழும்புக்கிளை:
173, செய்சர் வீதி,
கொழும்பு-11.

(0156)

ஊரிக்காடு
வல்வெட்டித்துறை.

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் சின்னக்கடைக்கு அண்மையில் பீச் றோட்டில் சகல வசதிகளுடன் கடைகள் வாடகைக்குண்டு. ச. துரைரத்தினம், 417, பீச் றோட், யாழ்ப்பாணம் 0122

மாநகரசபை எல்லைக்குள் சிறிய குடும்பம் வசிக்கக்கூடிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. விரும்புவோர் விளம்பர இல. 0157. 'ஈழநாடு', யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 0157

## பின்னுறுதிக் கட்டளையின் அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ் சென்ற ஜோன் இராசா குசைப்பிள்ளை மம்பெண் வெரோனிக்காவின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்,

சவிரிமுத்து கைம்பெண் றெஜினா, அச்சுவேலி.

— மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம்) இல: ரி/76.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ஆம் ஆண்டு ஆடி மாதம் 31-ந்திகதியன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி.
(ஒப்பம்)
சு. வ. கணேசன்,
பதிவாளர்.

1981ம் ஆண்டு ஆனி மாதம் 25ஆந் திகதி.

வரைதல்
வ மயில்வாகனம்
மனுதாரின் சட்டத்தரணி
0134

## வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

காயத்ரீ உபாசனை சித்தி பெற்ற காயத்ரீசித்தர் ஆர். கே. முருகேசு சுவாமிகள் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அண்மையோக வகுப்புகள் நடாத்தவிருக்கின்றார். இதற்கான ஏற்பாட்டை பலாலி ஆசிரியப் பயிற்சிக்கலாசாலை இந்துமாமன்றம் மேற்கொண்டுள்ளது.

ஜூலை மாத முற்பகுதியில் இன்று தினங்கள் நடைபெறவிருக்கும் இவ்வகுப்புகளில் முறையின்பத்தை தொட்டு அனுபவிக்கும் முறைகள் சுவாமிகளால் கற்பிக்கப்படவிருக்கிறது. (மா)

## ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் 35வது ஆண்டு விழாவும், விளையாட்டுப் போட்டியும் ஜூலை மாதம் 3ம் திகதி தொடக்கம் 5ம் திகதிவரை நடைபெறவிருக்கிறது.

வடமாராணரியில் 5 மைல் மரதன் ஓட்டப் போட்டியும் அடுத்த மாதம் 5ம் திகதி காலை நடைபெறவிருக்கிறது.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 09-07-81ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) அங்கசத்திர ஒழுங்கை வடிகால்.

2) விதானை ஒழுங்கை அணைச்சுவர் திருத்தவேலை

(3) இலந்தைக்குளம் அணைச்சுவர்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 07-07-81ம் திகதி செவ்வாய் கிழமை நண்பகல் 12-00 மணிவரை, கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 25/-ம் கேள்விவைப்புப் பணமாக ரூபா 100/-ம் செலுத்துவதன்பேரில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சிமன்ற பொறியியலாளரிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
25-06-81. 0152

இ. த. அன்ரன் பாலசிங்கம்
சட்டத்தரணி,
பன்றலை, தெல்லிப்பழை.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பழையைச் சேர்ந்த முருகர் மகள் கதிராசி என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தினதும் உடைமைப் பொருள்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம்) இல. 51/ரி

அழகர் சபாபதி தெல்லிப்பழை தென்மேற்கு.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1981-ம் ஆண்டு ஆடி மாதம் 10ம் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1981ம் ஆண்டு ஆனி மாதம் 1ந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி
மு. நல்லலிங்கம்,
பதிவாளர்.
0133

**மணிவாக்கு**

நீதியால் அவஸ்தைப் படுவதைவிட, அநீதிசெய்வதுதான் இன்னும் அவமானகரமானது

— பிளேட்டோ.

# நமது நோக்கு

## மனிதனும் மிருகமும்

உண்ணும் உணவிலே உயிர்க்குரிய குணம் விருத்தியடைவது பற்றி நாம் சிந்திக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது.

மனத்தின் விவேகம் உடம்பின் சுகத்தில் தங்கியிருக்கிறது என்று லத்தீன் முதுமொழி ஒன்று கூறுகிறது. இந்தக் கருத்தை கொழும்பு செரியாஸ் பத்திரி வைத்திய நிபுணர் டாக்டர் பி. ரி. டி. சில்வா குறிப்பிட்டிருக்கும் அரிய அறிவுரை நாட்டு மக்கள் அனைவருக்கும் சிந்தனைக்குரியதாகவுள்ளது.

எங்கள் உணவு வகைகளை உண்ணும் பழக்க வழக்கங்களையும் உடனடியாக மாற்றியமைக்காவிட்டால், நாம் நோயுற்ற மனிதர்களும் சுகபலம்பெற்ற மிருகங்களும் நிறைந்த நாடாக விரைவில்மாறிவிடுவோம்."

இது வைத்திய நிபுணரின் சொந்தக் கருத்தல்ல; விஞ்ஞான ரீதியில் வடித்தெடுத்த ஆராய்ச்சிக் கருத்தென்பதை சாதாரண மனிதன்தானும் ஒப்புக்கொள்ள முடியும்.

பாணையும், நன்கு தீட்டிய அரிசி வகையையும், உயிர்ச்சத்துக் குறைந்த சீனிசம்பல், தேங்காய்ச் சத்து நிறைந்த சம்பல், மீன் ஒழிந்த இறைச்சிவகை, பருப்பு, தானிய வகை, இயற்கையான இலைகுழை அற்ற, நாகரிக உணவு, சீனி நிறைந்த தேநீர், கோப்பி முதலிய பானங்கள் இந்நாட்டு மனித சுகாதாரத்தை கெடுத்து வருகிறதென்கிறார் வைத்திய நிபுணர் டாக்டர் சில்வா.

மனித உணவுக்கு அவசியமான தவிடு, கோது கடலை வகை, இலை குழை போன்ற உணவு வகைகள் மிருகங்களுக்கு தாராளமாக கிடைக்கின்றன. இதன் விளைவு விரைவில் எவ்வாறமையுமென்பதைப் படம்பிடிக்கவே "நாம் விரைவில் நோயுற்ற மனிதர்களாகவும், எங்கள் மிருகங்கள் வளம்பெற்று வாழும் கதி ஏற்படும் என்ற எச்சரிக்கை விடுத்திருக்கிறார் வைத்திய ஆராய்ச்சி நிபுணர்.

இந்த நாட்டிற்கு இன்று மிருகங்களால் அபாயம் இல்லை; சுகமுண்டு. ஆனால் மனிதர்களால் அபாயம் ஏற்பட்டிருக்கிறதை நோக்கும் போது வைத்திய நிபுணரின் எச்சரிக்கை தாமதித்து விட்டதேயென்று அஞ்ச வேண்டியிருக்கின்றது. சுகமுற்ற மனிதர்களாக அவசியம் மாற வேண்டும்.

சோறுங்கறியும், இலை குழை வகையும், தீட்டாத அரிசியும், மட்டாக உண்ணும் வழக்கமும் உண்பது நாழி என முன்னோர் அனுபவித்த உணவுப் பழக்கம். தீட்டாத அரிசி, சீனியற்ற தேநீர். இலைகுழை வகை - இவையெல்லாம் இக்காலத்தில் நீரிழிவு, இரத்த அமுக்கம் முதலிய நோய்கள் வந்த பின்னரே நாம் வேட்டையாடத் தொடங்கும் பொருட்களாக இருக்கின்றன!

நெல் விளைச்சல் பெருகி வருவதாக அரசு பிரசாரம் செய்கின்றது; அதனை அவசரப்பட்டு ஏற்றுமதி செய்யாமல் மக்களுக்கு குறைந்த விலையில் கொடுத்துதவுவது அவசியம்; பாண் வகை உணவைக் குறைப்பது அவசியம்; அதனையிட்டுக் கருத்தரங்கு அவசியமற்றது.

இவ்வித மாற்றங்களை அரசும் மக்களும் புரட்சிகரமாக ஏற்படுத்த முடியுமானால், நாவை அடக்கி, பேறுவை அடக்க, மனித உரிமையோடு, நாகரிகமாக வாழ வழிபிறக்கும்!

## சீனவும் இந்தியாவும்

'வெட்டுப்பகை கொத்துப்பகை' என்று வர்ணித்திருந்த சீன - இந்திய தொடர்பு இருபது வருடங்களுக்குப்பின் சிநேக முறையை நாடியிருப்பது உலக சமாதானத்தை விரும்பும் மக்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சியளிக்கும்; அது வெற்றி பெறுவதாக!

அது மட்டுமல்ல: அமெரிக்காவைக் கண்ணிலும் காட்டக் கூடாதென்ற சித்தாந்தம் பேசியசீனா இன்று கடந்த பத்து வருடங்களாக உறவு கொண்டாடுகின்ற வரலாற்றில் விசித்திரமான திருப்பம்!

மூன்றாவதாக: கம்யூனிஸ்ட் ரஷ்யாவும், நவசீனமுமே ஏழை மக்கள், தொழிலாளிகள் விடுதலைக்கு உழைக்கும் நாடுகள் என்ற உறுதியான கருத்து ஸ்டாலின் - மாவோ தங் ஆட்சிக் காலத்தில், ஜனநாயக உலகையே அச்சுறுத்தி வந்தது. சீன எல்லையை விட்டு எக்காரணம்பற்றியும் வெளியே செல்லாத பெருந்தலைவர் மாசேதுங், ரஷ்ய ஜனாதிபதி மார்ஷல் ஸ்டாலினுடைய மரணச்சடங்கில் கலந்து கொள்ளச் சென்றார் என்றால், அவ்விரு தேசங்களின் அந்நியோன்னியம் எவ்வாறிருந்தது!

இன்றும் இவ்விரு தேசங்களும் கம்யூனிஸ்ட் ஆட்சியை நடத்துகின்றன. ஆயினும் கீரியும் பாம்பும் போல பெரும் எதிரிகள் இவை. இந்தப் பின்னணியில் சீனா, அமெரிக்க ஆகிய நாடுகளின் நல்லெண்ணத்தைத் திரட்டுகின்றது. நவநாகரிக வாழ்வு விரும்பும் நவசீனா அமெரிக்காவை அணைப்பதும், இந்திய இலங்கை நட்புறவை வளர்த்து, ரஷ்யாவை அமர்த்தவும் விரும்புவது வியப்பல்ல.

அது எவ்வாறுயினும், இப்பெரும் தேசங்கள் தங்கள் முரட்டுத்தனமான கொள்கைகளைக் கைவிட முடியுமானால் நாம் இந்தச் சின்ன அழகான ஆத்மீக வாழ்வுக்கு பேர்போன நாட்டில் உட்பகைமையை ஒழித்து சகோதரர்களாக வாழ முடியாதென்ற நிலைமையை நாடுவது அவ்வளவு துலக்கமும் வேடிக்கையுமான செயல்.

# "வடக்கு, கிழக்கில் ஆயுதப்படையினரை உடன் வாபஸ் பெறுக!"

## இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1981ம் ஆண்டு மார்ச்சு முதல் ஜூன்வரை இடம்பெற்ற சம்பவங்களை விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஒரு விசாரணைக்குழுவை அனுப்பும்படி சர்வதேச மன்னிப்புச் சபையைக் கேட்கவேண்டுமென ஜனாதிபதியைக் கோரும் தீர்மானம் இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் வடபிராந்திய கிளைக்கூட்டத்தில் நிறைவேறியது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடந்த இக்கிளைக் கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்களும் நிறைவேறின.

மக்களைக் கைது செய்வதற்கும் தடுத்துவைப்பதற்கும் கட்டுப்பாடற்ற அதிகாரங்களை அதிகாரிகளுக்கு வழங்கும் ஜனநாயக விரோத சட்டங்களை உருவாக்கியதையும் மற்றும் குறிப்பாக இளைஞர்கள் உட்படப் பல தனிப்பட்டவர்கள் பாதுகாப்புப்படையினரால் கைதுசெய்யப்பட்டதையும், கடத்திச் செல்லப்பட்டதையும் எதுவித விசாரணையுமின்றித் தடுத்துவைக்கப்படுவதையும் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் வீதிகளில் வாகனங்கள் சோதனையிடப்பட்டு, வசிப்பிடங்கள் அத்துமீறிப் பிரவேசிக்கப்பட்டு மக்கள் பயமுறுத்தப்பட்டும், தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டும் மரணத்தில் முடிவுறும் அளவுக்கு துன்புறுத்தப்பட்டதையும், மே 31ந் திகதிக்கும் ஜூன் 8ந் திகதிக்குமிடையில் யாழ்ப்பாண நகரத்திலும் ஏனைய நகரங்களிலும் கிராமங்களிலும் அரசின படையினரால் கட்டவிழ்த்துவிடப்பட்ட பயங்கர ஆட்சியின் போது சிலர் கொலை செய்யப்பட்டதையும், மற்றும் பலர் காயப்படுத்தப்பட்டதையும், தனியாரினதும், பொதுமக்களி

(5ம் பக்கம் பார்க்க)

### "விசாரணைக் குழுவை நியமிக்குக!"

[யாழ்ப்பாண ]

யாழ்ப்பாண சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை தயாரிப்பதற்கென ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கும்படி இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தை கேட்டுக் கொள்ளும் தீர்மானம் யாழ். நிம்மர் மண்டபத்தில் திரு. சிலன் கதிர்காமர் தலைமையில் நிறைவேறியது.

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் வடபிராந்திய கிளையினர் இம் மாநாட்டைக் கூட்டியிருந்தனர்.

இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்வருமாறு: 1977 ஆகஸ்ட் சம்பவங்கள் மற்றும் 1979 அவசர கால நிலைமை ஆகியவை தொடர்பான மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் பெறுபேறுகளை வெளியே மக்கள் கவனத்திற்கு கொண்டுவரும் இம்மாநாடு சில உலக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு விசாரணையிலும் எவ்விதமான நம்பிக்கையும் இல்லையென வெளிப்படுத்துவதுடன், யாழ். சம்பவங்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கென ஜனநாயக உரிமை காப்பதற்கான இயக்கம் குடியியல் உரிமை இயக்கம் மற்றும் இதுபோன்ற இயக்கங்களுடன் ஆலோசனை செய்து ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கும்படி இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தை கேட்டுக்கொள்வதென தீர்மானிக்கிறது.

## தற்காலிக நூலகம்:

# "கல்யாண மண்டபத்தை பயன்படுத்துக"

ஒரு நாட்டின் அறிவு வளர்ச்சியை எடுத்துக்காட்டுவது அந்நாட்டில் இயங்கும் கல்வித் தாபனங்களும், நூலகங்களுமாகும்.

யாழ் நூலகம் 1934-ம் ஆண்டில் சுமார் 800 நூல்களைக் கொண்ட ஒரு சிறிய பொதுசன நூலகமாக உருப்பெற்று, காலப்போக்கில் வளர்ந்து சுமார் ஒரு லட்சம் நூல்களையும், 17,600 சஞ்சிகைகளையும் கொண்ட தெற்காசியாவிலேயே சிறந்த நூலகமாக விளங்கியது. இதன் வளர்ச்சியில் பங்கு கொண்ட சில பெரியார்கள் திரு க. கு. செல்லப்பா, உயர் நீதிமன்ற நீதிபதி, வைத்திய கலாநிதி ஐ. சாக்கம்பையா, திரு சி. பொன்னம்பலம், வைத்திய கலாநிதி சுப்பிரமணியம், வண. பிதா லோங், திரு சாம் சபாபதி, திரு அ. த. துரையப்பா, திரு எஸ். ஆர். ரங்கநாதன், கட்டடக்கலை நிபுணர் கே. எஸ். நரசிம்மன் ஆவர்.

திரு துரையப்பாவின் காலத்தில் நூலகம் துரித வளர்ச்சியடைந்தது. நூலகத்தின் வளர்ச்சிக்கு உதவிய ஸ்தாபனங்களில் ஆசியா பவுண்டேஷன் குறிப்பிடத்தக்க உதவிகளை வழங்கியது.

தற்போதைய மாணவ, கல்வி சமுதாயத்தின் தேவைக்கேற்ப, மாநகரசபை கடந்த சில வருடங்களாக நூலக செலவினங்களுக்குரிய நிதியைப் பன்மடங்காக அதிகரித்து, பல்லாயிரக்கணக்கான நூல்களை தருவித்து நூலகத்தின் பணியைப் போற்ற தக்கமுறையில் ஆற்றி வந்த பாராட்டப்பட வேண்டும் அளவுக்கு நூலகத்தில் ஒழுங்கும் ஊழியரிடையே சேவை பண்பும், நிலவியதையும் நிர்வாகம் சீரிய முறையில் நடைபெற்று வந்ததையும் யாவரும் அறிவர்.

திடீரென உலக யுத்தத்தில் தோன்றிய அழிவைப்போல் எங்கள் கலைக்கோவிலையும் கொடிய பாதகர்கள் ஜூன் மாதம் முதலாம் திகதி தீயிட்டுக் கொளுத்தினர்கள். சுமார் ஒரு லட்சம் நூல்கள், கிடைத்தற்கரிய நூல்கள் சாம்பலாயின. பல லட்ச ரூபா செலவில் பல வருட முயற்சியின் பயனாக அமைக்கப்பெற்ற அழகிய கட்டிடம் தீயினால் அழிந்தது. ஆசியா பவுண்டேஷன், அமெரிக்க நூலகம் தந்துதவிய பெறுமதியான இறுவர் நூல்கள், தளபாடங்கள் யாவும் தீக்கிரையாகிவிட்டன. தன் கலையற்ற புத்தகத்தை அலட்சியமாக வீசி எறிபவன் மனமில்லாது கட்டிக் காக்கும் பண்பை வளர்த்துக்கொண்ட தமிழனுக்கு தன் கண்முன்னே விலாசமற்று வெட்டிக் கிடந்த நூலகத்தை தீ சுட்டெரித்து நூலகம் சிதைந்து கொண்டு போகும்பவும் கட்டப்பட்டுவிடலாம். ஆனால் கிடைத்தற்கரிய நூல்களை எங்கே தேடுவது? எப்படிப் பெறுவது? எப்படியும் சிறந்த நூலக சேவை மக்களுக்கும் மாணவ மணிகளுக்கும் கிடைக்க வேண்டும்.

நூலகத்தை மாநகரசபையினர் தொடர்ந்து நடத்துவதற்கு மேற்கொள்ளும் முயற்சி பாராட்டுக்குரியது.

நூலகத்தைத் தற்காலிகமாக வேனும் நடத்துவதற்கு மாநகரசபை முன்னர் முடிவு செய்தது போன்று நூலக வளவுக்குள்ளேயே தற்காலிக கட்டிடம் அமைத்து நடத்துவது தான் நன்மை பயக்கும். நூலகம் நடத்துகிறோம் என்று சொல்வதற்காக ஒண்டுக்குள் கட்டிடங்களில் எல்லாம் நூலகத்தை அமைப்பதால் மக்களுக்கோ மாணவர்க்கோ ஏற்படும் சிரமங்களையும் சிந்திக்க வேண்டும். மாநகரசபை மண்டபத்திற்கு இக்கனத் தற்காலிகமாக மாற்றும் மேயரின் ஆலோசனையும் "ஈழநாடு" மக்கள் கருத்துப் பகுதியில் தெரிவிக்கப்பட்டிருந்ததையும் இந்த ஆலோசனைக்கமைய நூலகத்தை மாற்றவிருப்பதாக ஒரு செய்தியையும் பார்த்தேம். மண்டபத்திற்கு மாற்றினால் பரவாயில்லை. ஆனால் மண்டபத்தையொட்டியுள்ள சிறு சிறு அறைகளையே பாவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இதனால் ஓர் சமயம் சபை உத்தியோகத்தர் பயன்பெறலாமே தவிர பொது மக்களுக்கோ மாணவ மாணவிகளுக்கோ நிச்சயம் பயன் கிடைக்காது என்றே கூறலாம்.

அப்படியாயின் தெற்குப் பயனுள்ள மாற்றுவழி என்ன? நகரத்தில் இருக்கும் ஒரு நல்ல தனியார் கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து தற்காலிக நூலகத்தை நடத்துவதே சந்தர்ப்பமாகத் தோன்றுகிறது. இல்லையெனில் நகராட்சி பெருஞ்செலவில் அமைக்கப்பட்டு பல வருடங்களாக வெறுமனே கிடக்கும் கல்யாண மண்டபத்தைத் தற்காலிக நூலகமாக்கினாலென்ன? இது ஒரு பயனுள்ள யோசனை என்றே தோன்றுகிறது.

மாநகரசபை இதனைக் கவனத்திற் கொள்ளுமென்றே நம்புகின்றேன்.

முல்லைக்கவி

பழைய பூங்கா வீதி,

யாழ்ப்பாணம்.

**மக்கள் கருத்து**

# "தமிழ்ஈழ மக்களின் நலன்பற்றிப் பேச பிரிட்டிஷ் எம்.பிக்களுக்கு உரிமை கொடுத்துள்ளோம்"

## ஜே. ஆர். பேச்சுக் குறித்து 'யோகேஸ்' அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசியலமைப்பு யாப்பு தயாரிக்கப்பட்ட போதோ அது நிறைவேற்றப்பட்ட போதோ தமிழீழ மக்கள் பங்குபற்றவில்லை. எனவே நிறைவேற்று அதிகாரம் தமிழீழ மக்கள் மீது செல்லுபடியாகாது"

யாழ்ப்பாணம் சம்பவங்கள் குறித்து, ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு பிரிட்டிஷ் எம். பிக்கள் இலண்டனிலிருந்து வந்த தந்திகள் பற்றி அவர் பொது நல அரசு நாடுகள் பாராளுமன்ற சங்கத்தின் சர்வதேசக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசியபோது வெளியிட்ட கருத்துக்களை வி. டு. யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். எம். பி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"தமிழ் மக்களை தங்களை பாட்டுக்கு விட்டுவிட்டால், உங்கள் உள்நாட்டு விவகாரங்களில் பிரிட்டிஷ் எம். பிக்கள் தலையிடாமல் இருக்க நாங்களும் உதவுவோம்"

எமது இறைமையை நாம் ஆட்சிப்படுத்த, பிரிட்டிஷ் எம். பிக்கள் மட்டுமல்ல மனித உரிமையையும், விடுதலையையும் சுயமரியாதையையும் விரும்பும் மக்கள் உலகெங்கும் இருந்து தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பார்கள்.

"நாங்கள் அடிமைப்பட்டிருக்கிறோம். இழந்த அரசை மீட்க முயல்கிறோம்" என மாநாட்டுக்கு வந்த எம். பிக்களுக்கு எங்கள் பிரச்சினைகள் பற்றி தெரிவித்திருந்தோம். அதை உறுதிப்படுத்தி பேசி, எமது விடுதலை முயற்சிக்கு ஒரு வகையில் ஜனாதிபதி திரு. ஜயவர்த்தனவும் உதவியுள்ளார்.

யாழ்ப்பாண வன்செயல்களின் அடிப்படைக் காரணகர்த்தாவான அரசு இப் பிரச்சினைகளை மூடிமறைப்பது முழுப் பூசினிக்காயை சோற்றில் மறைப்பது போலாகும். உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளும் காலத்தை நீடிக்க வேண்டாம். இலங்கைத் தீவில் இரண்டு தனித்தனி நாடுகள், நாட்டினங்கள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்வது தான் ஒரே ஒரு வழியாகும்.

தமிழ் ஈழத்தை ஆட்சிப் படுத்தும் உரிமையும் பொறுப்பும் தமிழ் மக்களுடையதாகவுள்ளது. தமிழ் ஈழ மக்களின் நலனுக்காக பேசும் உரிமையை பிரிட்டிஷ் எம் பிக்களுக்கு நாம் வழங்கியுள்ளோம். எங்களுக்கும் பிரிட்டிஷ் எம். பிக்களுக்குமுள்ள விவகாரங்களில் நீங்கள் தலையிட வேண்டாம்" (ஊ)

# சட்டநிருபண அமைப்பில் சோவியத் யூனியன்

## இந்திய பிரதம நீதிபதி கருத்து

மாஸ்கோ, ஜூன், 28

"பல நாடுகள், சட்டநிருபண அமைப்பின் ஜனநாயக முறையினை அறிமுகப்படுத்த முயலுகின்றன. இந்த நிலையில் இதர நாடுகள் செய்து முடிக்கத் தவறியதை சோவியத் சமுதாயம் சாதனை செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. சோவியத் சமுதாயத்தின் ஜனநாயகமே இதற்குச் சான்று."

இவ்வாறு, இந்தியப் பிரதம நீதிபதி யஷ்வந்த் விஷ்ணு சந்திரசூட் இங்கு கூறினார்.

சோவியத் வழக்கறிஞர் சங்கத்தின் அழைப்பின் மீது சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்த மாஸ்கோ, தாஷ்கந்து, சமர்கந்து, லெனின்கிராட் போன்ற நகரங்களுக்குச் சென்று வந்த பின்னர் நிருபர்களுக்கு அவர் பேட்டியளித்தார்.

"எனது சோவியத் விஜயத்தின் மூலம்; சோவியத் சட்ட முறையை நன்கு பரிச்சயப்படுத்திக் கொள்ளவும், சோவியத் சட்ட அறிஞர்களுடன் தொடர்பேற்படுத்திக்கொள்ளவும், சோவியத் சமூகம் பற்றி அறிந்து கொள்ளவும் முடிந்தது. தாஷ்கந்துக்கும் சமர்கந்துக்கும் நான் விஜயம் செய்தபோது; அங்குள்ள கட்டடங்களும் கலாசாரமும் எனக்கு இந்தியாவை நினைவூட்டின. புராதன கலாசார, கலை பாரம்பரியங்களையும் உஸ்பெக் மக்களது மரபுகளையும் அரசினால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருவது என் மனதைப் பெரிதும் கவர்ந்து விட்டது" என்று அவர் கூறினார்.

"சோவியத் சட்ட அமைப்பு, அதன் நிர்வாக முறை பற்றி நான் அறிவதில் ஆர்வம் கொண்டிருந்தேன். சோவியத் நீதிபதிகளையும், வழக்கறிஞர்களையும் அட்டோர்னிகளையும் சட்ட நிபுணர்களையும் நான் சந்தித்தேன்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

# ஆயுதக் கட்டுப்பாடு அமெரிக்க நடவடிக்கை

## சைரஸ்வான்ஸ் கண்டனம்

நியூயோர்க், ஜூன் 28

தற்போதைய அமெரிக்க நிர்வாகத்தின் வெளிநாட்டுக் கொள்கைப் போக்கை, பிரபல அமெரிக்க அரசியல்வாதியான சைரஸ்வான்ஸ் மிகக் காரசாரமாகக் கண்டித்துள்ளார்.

டெலிவிஷன் நிகழ்ச்சியொன்றில் தோன்றிய போதே அவர் இக்கண்டனத்தைத் தெரிவித்தார். இவர் முன்னர் காட்டர் நிர்வாகத்தில் ராஜாங்கச் செயலாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கேந்திர முக்கியத்துவ ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் பேச்சுக்களுக்கான அனுகூலமான அணுகுமுறையை அமெரிக்கா இன்னமும் ஆரம்பிக்காதது நல்லதல்ல என்று கூறிய அவர்; அணுவாயுதங்களை கட்டுப்படுத்தவும், குறைக்கவுமான பேச்சுக்கள் சோவியத்யூனியனுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் தொடங்குவதுதான் சர்வதேச பதட்டத் தணிவுக்கான யதார்த்த பூர்வமான வழியாகும் என்றார்.

ரஷ்யர்கள் சமத்துவத்துக்கும் சக்திகளின் சமநிலைக்குமாகப் பிரயத்தனமெடுப்பதால் இந்த அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பது நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் எனத் தாம் நம்புவதாகவும் சைரஸ்வான்ஸ் குறிப்பிட்டார்.

# மடு மாதா உற்சவம், யாத்திரிகர் திரள்கிறார்கள்

[மன்னார்]

மடுமாதா ஆலய உற்சவத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு தினமும் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் மடுமாதா ஆலயத்தில் குவிந்தவண்ணம் இருக்கின்றனர்.

மடுமாதா ஆலய உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 2-ந்திகதி நடைபெறும் விசேட திருப்பலி பூசையுடன் உற்சவம் முடிவடையும்.

வெளியூர்களிலிருந்து வரும் யாத்திரிகர்களின் நலன் கருதி விசேட ரயில், பஸ் போக்குவரத்துச் சேவைகள் நடைபெற்றுவருகிறது. ஆலயச் சுற்றாடலில் சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்காலிக பொலிஸ் நிலையமும், நீதிமன்றமும் நிறுவப்பட்டுள்ளன.

ஆலயச் சுற்றாடலில் வானொலிக் கருவிகள் பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. மடுப்பகுதியிலுள்ள தேக்கம் ஆற்றில் குளிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. மடுத் திருப்பதிக்குவரும் யாத்திரிகர்கள் தம்முடன் துப்பாக்கிகளை எடுத்துவருவது தடை செய்யப்பட்டுள்ளதுடன், மடுப் பகுதியிலுள்ள காடுகளில் மிருகங்களை வேட்டையாடுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

# விரைவில் மின் விநியோகம்

[உடுப்பிட்டி]

நெல்லியடி ஆச்சாரியார் வீதி, புதுத்தோட்ட வீதி ஆகிய இரு வீதிகளுக்கும் விரைவில் மின்சார விநியோகம் கிடைக்கவுள்ளது.

இதற்கான வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

இம்மின்சார விநியோகத்திற்கென நெல்லியடிப் பட்டினசபை 25,000 ரூபாவைச் செலவு செய்துள்ளதாக நெல்லியடிப் பட்டினசபைச் செயலாளர் திரு. வ. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

# ஆயுதப்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வதும் பலகோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசப் படுத்தப்பட்டதையும் மற்றும் மீளப்பெறமுடியா இழப்புக்கள் ஏற்படுத்தப்பட்டதையும் மற்றும் யூன் 2ந் திகதி அவசரகாலச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டு ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த இரவு வேளைகளில் பொலிசாரினாலும் இராணுவத்தினராலும் கொடூரமாகக் கொலைகள் மேற்கொள்ளப்பட்டதையும், மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்திச் சபையின் தேர்தல் ஒழுங்கீனமான முறையில் நடத்தப்பட்டதையும், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைகேடான நடவடிக்கைகளையும், தேர்தல் சட்டங்களை மீறியவர்களைத் தண்டனைக்குட்படுத்தத் தவறியதையும், வன்மையாகக் கண்டிப்பதுடன் இவற்றிற்கான முழுப்பொறுப்பையும் இலங்கை அரசாங்கமே ஏற்க வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்கள் அனுபவிக்கும் பீதி, இழப்புகள், நட்டங்கள், இம்சைகள், ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படும் நிலைமை ஆகியவற்றைக் கவனத்திற் கொள்ளும் இம்மாநாடு, எந்தவொரு நீதிமன்றத்திலும் விசாரணைக்குட்படுத்தப் படாது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலைசெய்யும்படியும், முறையற்றவகையில் கைதுசெய்வதையும், நீண்டகாலம் தடுப்புக்காவலில் வைத்திருப்பதையும் அனுமதிக்கும் சட்டங்களை நீக்கும்படியும், மற்றும் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து ஆயுதப் படையினரை உடனடியாக வாபஸ் பெறும்படியும், மற்றும் இவ்விரு மாகாணங்களிலும்வாழும் மக்களின் தேசிய இனத் தன்மையைக் கவனத்திற்கொண்டு பொலிஸ்படை மறுசீரமைக்கப் படுதல்வேண்டுமெனவும், இப்பிரதேசங்களின் உள்ளூர்ப் பாதுகாப்பு பற்றிய விடயம் கூடுதலான அதிகாரங்களைக் கொண்ட வேறு பிரதேச அமைப்புக்கள் உருவாக்கப் படும்வரை மத்திய அரசிலிருந்து மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு மாற்றப்படுதல்வேண்டுமெனவும், மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 1981ம் மே, யூன் மாதங்களில் இடம்பெற்ற மூர்க்கத்தனமான அட்டூழியங்களுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்கப்படவேண்டுமெனவும், மற்றும் இவ்வட்டூழியங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த நட்டஈடு வழங்கப்படவேண்டுமெனவும், அத்தகைய நட்டஈடுகள் மதிப்பீடு செய்யப்படும்வரை முற்பணம் வழங்கப்பட வேண்டுமெனவும், இலங்கை ஜனாதிபதியைக் கோருகிறது.

# நற்கருணை மகாநாடு

(கண்டி)

ஆர்த்துநகரில் நடைபெற இருக்கும் அனைத்துலக நற்கருணை மகாநாட்டிற்கு முன்னோடியாக கண்டியில் ஆரம்பமான இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் நற்கருணை மாநாடு நேற்றுடன் முடிவு பெற்றது.

கிறிஸ்துவின் மறையுடலாம் நற்கருணைக்கு பெருவிழாவாக அமைந்துள்ள இம்மாநாடு கருதினால் தோமஸ் கூரேயால் கொடியேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது. பௌத்த இந்து முஸ்லிம் மதப்பெரியார்கள் மற்றும் பல முக்கிய பிரமுகர்கள் இவ்விழாவில் கலந்து சாதி, மத, இனத்திற்கு அப்பாற்பட்டமுறையில் இவ்விழாவைச் சிறப்பித்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இம்மாநாடு தேவ நற்கருணையாம் கிறிஸ்து ஸ்தாபித்ததின் முக்கிய நோக்கங்களான அன்பு வாழ்வு, பகிர்வு வாழ்வு, தன்னைத்தானே பிறர்க்காக உடைத்து வாழ்தல் போன்ற முக்கிய பண்புகளை வலியுறுத்தி நின்றது. இன்று மாலை திவ்விய நற்கருணைப் பவனியுடன் இவ்விழா முடிவடைகிறது. (கி)

# மீண்டும்சாதனை ஏற்படுத்திய மாணவன்

[யாழ்ப்பாணம்]



சாதனை வீரன் செல்வன் அழகராசா, ஸ்ரீகாந்தராஜா (வயது 18) மீண்டும் உலக சாதனை ஏற்படுத்தியுள்ளார்.

உலக சாதனை வீரன் அழகராசா ஸ்ரீகாந்தராஜா மீண்டும் இருந்துஎழும்புதல் என்ற உலக சாதனையை கடந்த சனிக்கிழமை காலை 8-42மணிக்கு முறியடித்துள்ளார்.

இவர் 2நிமிடத்தில், 213தடவைகள் செய்தார். முன்னைய உலகசாதனை 2நிமிடத்தில் 165 தடவைகள் ஆகும்.

இச்சாதனை முயற்சிக்கு பங்குத்தந்தை டாக்டர் பி. எம். இம்மானுவேல் தலைமைவகித்தார் டாக்டர் ஜே. பி. இ. பிலிப் ஆரம்பித்துவைத்தார். யாழ். நகரமேயர் திரு. இர. சா விஸ்வநாதன் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார். திரு. எஸ். மரியதாஸ் திரு. விமலேந்திரன் ஆகிய இருவரும் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினார்கள்.

ஸ்ரீகாந்தராஜா முன்னர் 1979 ஒற்றைக்காலில் 22மணித்தியாளம் நின்று சாதனை ஏற்படுத்தியது 1980 ஆண்டு கினிஸ் புத்தகத்தில் 342ம் பக்கத்தில் பதியப்பட்டுள்ளது. உயர உதைத்தலில் 4மணி 13நிமிடத்தில் 8516தடவைகள் செய்து நிலைநாட்டினார். இது சென்றமே மாதம் 30ம் திகதி நிலைநாட்டப்பட்டது.

# குடும்பஸ்தர் மதுவுக்குப் பலி

(மட்டக்களப்பு)

தொடர்ந்து இரண்டு நாட்கள் மதுவிருந்தாட்டம்கொண்ட ஐந்து பிள்ளைகளின் தந்தை அளவுக்கதிகமாக மது அருந்தியதனால் மரணமானார்.

இச் சம்பவம் மட்டக்களப்பு சச்சந்தீவு என்னும் கிராமத்தில் நடைபெற்றது கதிரமலை தங்கராசா (50 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக மது போதையில் காணப்பட்டதாகவும் சம்பவ

(5-ம் பக்கம் பார்க்க)

வெலிங்டன்
10-30, 2-30 6-00, 9-30
ரஜனிகாந்த் - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ். நகர்
10 30 2 30, 6-00, 9-30
அழியாத கோலங்கள்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

வின்ஸர் இன்னும் சிலதினங்கள் மட்டும்
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, 2-30, 6-00
சிவாஜி கணேசன் - கே. ஆர். விஜயா
ரிஷிமூலம்
From 01-07-1981 Moving Violation Color

6 வது ஜனத்திரள் வாரம்!
சாந்தி (யாழ்நகர்) 10-30 2-30, 6-30, 9-45
சிவாஜி, விஜயா
தர்மராஜா (கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ சீதனி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
ரட்சகத்தி பைரவன்
(வண்ணப்படம்)

மனோகரா தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ்ப்பாணம்)
நாகேஷ் - ஜெயந்தி - சௌகார் ஜானகி
எதிர்நீச்சல்

கடைசி வாரம்
ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
★ ரஜனி காந்த் ★ ஜெயமாலா
★ ஸ்ரீபிரியா ★ கமலன்
★ சௌகார் ஜானகி நடித்த
மகாராஜா சுரேஷ் கூட்டுத்தயாரிப்பு
தீ
3-ந் திகதி முதல் எம்.ஜி ஆர்.-ஜெயலலிதா
எங்கள் தங்கம்

A long awaited film that has come to smash all the previous record collection.
RAJAH Jaffna Daily 10-30, 2-00, 4-30, 7-00 and 9-30
Within 2 Days 11 Housefull Shows and Twelve Thousand Patrons have Seen. Runing with Packed Houses.



Bruce Lee Fighting his way to fame with his New Martial Arts

Golden Harvest's Presentation of the year

It tells the struggle of an overseas Chinese Leader

BRUCE LEE MARIAYI

Thailand's leading Actress MALARIN

THE BIG BOSS
(Scope and Color)
Adults only வயதுவந்தவர்களுக்கு மட்டும்
Do not miss Bruce Lee Fighting skills with New Ideas


# துன்னாலை வாலிபர் மர்ம மரணம்:

# 'இளைக்கயிற்றில் சுருக்கிட்டு இறந்திருக்க முடியாது''

## பிரேத பரிசோதனைசெய்த டாக்டர் சாட்சியம்

(நமது புலோலி நிருபர்)

''இறந்தவரை உயிருடன் இந்த இளைக் கயிற்றில் தூக்க முடியாது. இறந்தவர் இந்தக் கயிற்றில் தூங்கியிருக்கவும் முடியாது மூச்சுத் திணறி சுவாசம் நின்றதினாலேயே மரணம் சம்பவித்துள்ளது''

இவ்வாறு துன்னாலை வாலிபர் இராஜகோபால் மர்மமரணம் சம்பந்தமான மரண விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு கே. எஸ் மகேசன் முன்னிலையில் நடைபெற்றபோது சாட்சியமளித்த பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை பதில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மயில்லேறும்பெருமாள் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:

''இறந்த இராஜகோபாலின் பிரேத பரிசோதனையை நான் மேற்கொண்டேன். இறந்தவரின் சடலம் பாடசாலையின் மரத்தோரத்தில் ஒன்றில் தொங்கிக் கொண்டிருந்தது இளைக் கயிறு ஒன்றிலேயே சடலம் தொங்கிக்கொண்டிருந்தது இரண்டு கால்களும் நிலத்தில் முட்டியபடி இருந்தன. இரண்டு முழங்கால்களும் வளைந்தபடி இருந்தன. இரண்டு கால்களாலும் உடன் இரத்தம் வருவதைக் கண்டேன். இறந்தவர் நீலச் சேட்டும், பச்சைச் சாரமும் அணிந்திருந்தார். இறந்தவரின் சடலத்தை எனது தொழில் உதவியாளருடன் கீழ இறக்குவித்தேன்.

''வயிற்றுக்கு அடிப்பக்கமாக உரஞ்சல் காயங்கள் காணப்பட்டன. நாக்கு வெளியே தள்ளப்பட்டிருந்தது, நாக்கு பல்லுக்கிடையில் கடிபட்டிருந்தது. நாக்கு நீலநிறமாகவும் காணப்பட்டது. உள்காயங்கள் ஒன்றையும் கவனிக்கவில்லை, இரத்தம் கட்டிபட்டுக் காணப்பட்டது, தலையில் உள்காயங்கள் ஒன்றும் காணப்படவில்லை, கழுத்தில் திருகப்பட்ட அடையாளங்களும் காணப்படவில்லை, பிராணவாயு இல்லாதபடியால் நாக்கு நீல நிறமாக மாறியிருக்கவேண்டும்.

''இறந்தவரின் உடம்பில் காணப்பட்ட இரத்தம் உரஞ்சல் காயங்களிலிருந்து ஒழுகிய இரத்தமாகக் காணப்பட்டது. கழுத்தில் சுருக்கிடப்பட்டு தூக்கியதால் மூச்சுத்திணறி சுவாசம் நின்றதால் மரணம் ஏற்பட்டுள்ளதென எனக்குத் தோன்றுகிறது. இறந்தவர் முன்னர் மயக்கமுற்ற நிலையில் இருந்திருக்கலாம் அடிவயிற்றிலே பலமாகத் தாரமாக அடித்தால் மயக்கம் அடையலாம்.

இறந்தவரை உயிருடன் தூக்கியிருந்தால் இந்தக்கயிற்றில் தூக்கமுடியாது. இவர் இந்தக்கயிற்றில் தூங்கியிருக்க முடியாது, இறந்தவரின் வயிற்றுக்கு [illegible] காணப்பட்டது.'' [அ]

## மத்தியகல்லூரி வெற்றி

[அரியாலை]

யாழ் மத்திய கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கட்போட்டியில் யாழ் மத்திய கல்லூரி 50 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 105ஓட்டங்களைப்பெற்றது. யாழ் மத்திய கல்லூரி 6 விக்கட்டுகளை இழந்து 155 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

ஸ்கந்தவரோதயக்கல்லூரி தனது இரண்டாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது.

## குடும்பஸ்தர்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தினம் இவர் பிரக்ஞை இல்லாமல் காணப்படவே உறவினர் உடனடியாக மட்டக்களப்புப் பிரதான வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அனுமதித்துச் சில மணிநேரத்தில் காலமானதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இவரின் மரணத்திற்கு அளவுக்கதிகமான மதுதான் காரணம் என்று வைத்திய அறிக்கை தெரிவித்ததையடுத்து மட்டக்களப்பு நகர மரண விசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் இயற்கை மரணம் என்று தீர்ப்பளித்தார். (அ)

## பெண்ணிடம்வழிப்பறிமுயற்சிதோல்வி

(மட்டக்களப்பு)

ஆஸ்பத்திரிக்குச்சென்றுவிட்டுத் தனது தனியே வீடு திரும்பிக்கொண்டிருந்த குடும்பப் பெண்ணிடம் கத்தியைக் காட்டித் தங்கச் சங்கிலியைப் பறிக்க முயன்றுள்ளார் ஒருவர். பொலிசார் அவரைப் பொது மக்களின் உதவியுடன் மடக்கிப் பிடித்தனர்.

இச் சம்பவம் மட்டக்களப்பு கோவிந்தன் வீதி, வங்கிக்கு அருகாமையில் நடைபெற்றது.

இது தொடர்பாக மட்டக்களப்பு குற்றத்தடுப்புப்பொலிசார் சந்தேகத்தின் பேரில் அம்பாறை இங்குறனை வாசியான ரூபட் திசநாயக்கா என்ற 25 வயது நபரைக்கைது செய்துள்ளனர்

சம்பவ தினம் மட்டக்களப்பு நாவற்குடா மேல்மாடி வீதியைச் சேர்ந்த திருமதி சாந்தலிங்கம் கனேசம்மா என்ற பெண் பகல் 11 மணியளவில் ஆஸ்பத்திரியிலிருந்து தமது வீட்டிற்கு கோவிந்தன் வீதியால் திரும்பிக் கொண்டிருந்த போது வங்கிக்குச் சற்றுத் தொலைவில் வைத்து ஒரு இளைஞன் தோன்றி கத்தியைக் காட்டி பயமுறுத்தி அவரது சங்கிலியைப் பறிக்க முயன்றாராம். அப் பெண் கூக்குரல் இடவே கடமையில் ஈடுபட்டிருந்த வங்கி ஊழியர் பொலிசாருக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுக்கவே பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்தனர். பொது மக்கள் உதவியுடன் அவர்கள் அவ்வாலிபனை மடக்கிப் பிடித்தனர்.

திருடனிடமிருந்து சுமார் 15,500 ரூபாய் பெறுமதியான தங்கச் சங்கிலியை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு கொடித்துவக்கு மீட்டார். சந்தேக நபர் ரிமாண்டில் வைக்கப் பட்டார். (அ)


ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-தேவிகா
நீலவானம்

வெலிங்டன் (சாவகச்சேரி)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
ராஜன் ...... புஷ்பலதா
கற்பூரம்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-கே. ஆர். விஜயா
தங்கை



யாழ்ப்பாணம் கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

முகாமையாளர் தேவை

மேற்படி பதவிக்கு கீழ்க்காணும் தகமை உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகமைகள்

1. க. பொ. த. (சாதாரண)த்தில் கணக்கியல் திறமை சித்தியுடன் சித்தியும்.
2. கூட்டுறவு பயிற்சி சாதாரண பிரிவு சித்தியும் அடைந்திருக்கவேண்டும்.
3. மிருக வைத்திய அனுபவம் விசேட தகமையாக கணிக்கப்படும்

வயது 21—35
பிணைப்பணம் ரொக்கம் ரூபா 2000/-
ஆதனப் பிணை ரூபா 5000/-
சம்பளம் 195 — 345 / 10x10 — 12.50x14

விண்ணப்பத்துடன் அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திர பிரதிகளும் கல்வித்தகமைப் பிரதிகளும் பிறப்பு அத்தாட்சிப் பிரதி, வசிப்பிடம் சம்பந்தமான சான்றிதழ் பிரதியுடன் 15-7-81-க்கு முன் பதிவுத் தபால் மூலம் தலைவர், கோழிவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். விண்ணப்பக் கடித இடது பக்க மேல் மூலையில் முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.

சி. தியாகராசா,
தலைவர்,
கோழிவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

0153

# 1-ம் எதிரி கொட்டனுடன் வந்து தம்பியைத் தேடினுர்

## இறந்தவரின் சகோதரி சாட்சியம்

[புலோலி]

"தம்பி இராஜகோபால் பாடசாலைக் கட்டிடத்தினுள் தூங்கிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு ஓடிச் சென்ற போது அவர் மெல்லிய இளைக்கயிற்றிலே முகம் கீழே குனிந்த படியும் இரண்டு கால்களும் நிலத்திலேயே முட்டியபடி மடிந்த படியும் தூங்கிக் கொண்டிருந்தார் என்று இறந்த இராஜகோபாலின் சகோதரியான விஜயரத்தினம் பாக்கியம் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது.

'இறந்த இராஜகோபால் எனது தம்பி. கடந்த வைகாசி மாதம் 18-ம் திகதி பி. ப. ஒரு மணியளவில் சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவர் என்னுடைய வீட்டிற்கு வந்து இராஜகோபால் எங்கே என்று கேட்டார். அப்படி அவர் கேட்ட போது என்னத்திற்காக அவரைக் கேட்கின்றீர்கள் என்று நான் கேட்டேன். அவர் உமது தம்பி எனது மகளில் ஆசையாக இருக்கின்றுராம் என்று என்னிடம் சொன்னுர். அந்த நேரத்தில் சுப்பிரமணியம் ஏன் அப்படி என்னிடம் சொன்னுர். எனஎனக்குத் தெரியாது.

தம்பி இராஜகோபால் இங்க இல்லை என்று நான் சொன்னேன். வல்லியானந்தப்பிள்ளையார் கோவில் பக்கம் இராஜகோபால் போயிருப்பாரா என்றும் கேட்டார். நான் தெரியாதென்று சொன்னேன். அவரை நான் திருத்தி வைப்பேன் என்று சொல்லி விட்டுச் சென்றுர். சுப்பிரமணியம் என்னிடம் வந்து எனது தம்பியை விசாரித்த போது கையில் கொட்டன் வைத்திருந்தார். சுப்பிரமணியம் போனதன்பின் தம்பி இராஜகோபால் வீட்டிற்கு வந்தார்.

'எனது மகன் பரமேஸ்வரனிடம் சுப்பிரமணியம் வந்து தேடிக்கொண்டு போகிறுர். என்று மாமாவிடம் சொல்லு என்று சொன்னேன் பின்பு 3-30 மணிபோல் நான் குளிக்கச் சென்று விட்டேன். 3-45 மணிபோல் திரும்பி வந்தேன் பின்னர் நான்கோவிலுக்குப் போய்விட்டேன்.

நான் கோவிலிலிருந்து 6மணியளவில் வீட்டிற்குவந்தேன், நான் கோவிலால் வந்தபின் இராஜகோபாலைக் காணவில்லை நான் கோவிலுக்குப் போவதற்கு முன்னரேயே கடைசியாக இராஜகோபாலைக் கண்டேன்.

### ரேணுகாதேவியின் வீடுகட்டும் கூலியாக...

சுப்பிரமணியத்தின் மகள் ரேணுகாதேவி வீடுகட்டுவித்த போது தம்பி இராஜகோபால் அங்கே கூலியாகநின்று வேலை செய்தார். இந்தச் சம்பவம் நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு 1ம் சந்தேகநபர் சுப்பிரமணியத்தின் மகள் ரேணுகாதேவியிடம் இறந்த எனது தம்பி இராஜகோபால் ஆசையாக இருக்குது" என்று சொன்னதாகவும், ரேணுகாதேவியின் மாமஞர் நவரத்தினம் எனது தம்பியைக் கண்டித்தாரென்றும் எனது தம்பி மன்னிப்புக் கோரினுர் என்றும் பொன்னையா பெண் செல்வரத்தினம் எனக்குச் சொல்லியிருந்தார். பொன்னைய பெண் செல்வரத்தினம் துன்னலை வடக்கில் வசிப்பவர்.

சம்பவதினம் 11 மணிவரை தம்பி இராஜகோபாலின் வரவுக்காகக் காத்திருந்தோம். அன்று அவர் வரவில்லை. அடுத்தநாள் காலை 19ம் திகதி காலை 6.80 மணிபோல் இராஜகோபால் துன்னலைப்பாடசாலையில் தொங்கிக்கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். உதயராசா என்பவரே வந்து எனக்குச் சொன்னுர். உடனே அங்கு ஓடிச்சென்றேன். அவர் தொங்கிக்கொண்டிருந்தார் நான் குளறினேன். ஆட்கள் வந்து கூடியிருந்தார்கள். அங்கு வந்தவர்கள் என்னைக் கிட்டப் போக வேண்டாமென்று சொல்லி மறித்தார்கள். பின்பு சுப்பிரமணயம் தங்கவடிவேல் என்பவர் பொலிசிற்குத் தகவல் கொடுத்தார்.

1வது சந்தேகநபரான சுப்பிரமணியம் எதிர்க்கூண்டில் இருக்கிறுர். 2வது சந்தேகநபர் சின்னத்தம்பி எங்கள் ஊரில் இருப்பவர். 3வது சந்தேகநபர் வடிவேல் சரவணசிவா 1வது சந்தேகநபர் சுப்பிரமணியத்தின்மகள் ரேணுகா தேவியின் கணவன். 3வது சந்தேகநபர் வைகாசி மாதம் 18ந் தேதி இரவு 7 மணியளவில் எங்கள் வீட்டைக் கடந்து ஒழுங்கையால் போனதைக் கண்டேன்.

"சம்பவ தினம் காலை, தம்பி பாடசாலையில் தொங்கிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டு ஓடிச் சென்றபோது, மெல்லிய இழைக்கயிற்றிலேயே தொங்கிக்கொண்டிருந்தார்.

முதலில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது தெரிந்தது. பிரேதம் இறக்கப்பட்ட பின்பு கவனமாகப் பார்த்தபோதே ஆண் உடம்பிலிருந்து இரத்தம் வடிந்தது தெரிந்தது. [அ]

# தமிழ் நூல்களை பாதுகாக்கமுயற்சி

[கொழும்பு]

இலங்கையில் சமீப காலத்தில் வெளியான தமிழ் நூல்களைச் சேகரித்துப் பாதுகாக்கும் முயற்சியில் பிரதேச அபிவிருத்தி, இந்துசமய கலாசார, தமிழ்மொழி அலுவல்கள் அமைச்சு ஈடுபட்டுள்ளது.

முதற் கட்டமாக 1977, 78, 79, 80 ஆகிய ஆண்டுகளில் இலங்கையில் பிரசுரிக்கப்பட்ட நூல்கள் திரட்டப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட நான்கு ஆண்டுகளில் தமிழ் நூல்களை எழுதி வெளியிட்ட நூலாசிரியர்கள் அல்லது அந்நூல்களை வெளியிட்ட பிரசுராலயங்கள் ஒவ்வொரு நூலிலும் மூன்று பிரதிகள் வீதம் தமிழ் அலுவல்கள் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தி அமைச்சு, கொழும்பு 4. என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கலாம். அல்லது நேரிலும் ஒப்படைக்கலாம் மூன்று பிரதிகளுக்கும் உரிய விலை அமைச்சினுல் வழங்கப்படும் எனத்தெரிகிறது.

அத்தோடு மேற்குறிப்பிட்ட நூல்களில் தரமானவை சமயம், நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், குழந்தை இலக்கியம், இலக்கிய வரலாற்று ஆய்வுகள், மொழிபெயர்ப்பு, பாலியல் கல்வி, ஆகிய தலைப்புகளின் கீழ் சாகித்திய மண்டலப் பரிசுகளுக்காகவும் பரிசீலிக்கப்பட்டு ரொக்கப்பரிசுகள் வழங்கப்படும் என்றும் தமிழ் அலுவல்கள் பணிப்பாளர் திரு. ஆ. பாஸ்கரதாஸ் தெரிவித்துள்ளார்.

# இப்படியும் நடக்கிறது

யாழ் நகரின் மத்தியில் உள்ள ஒரு கல்லூரியில், யாழ். மாவட்ட அபிவிருத்திசபை தேர்தல் சம்பந்தமாக இம்மாத முதல் வாரத்தில் சிலர் 'குடி'யிருந்ததும், அக்காலப்பகுதியில் கல்லூரி வாசிகசாலையிலிருந்த பெறுமதிமிக்க பல புத்தகங்கள் மாயமாக மறைந்ததும் நீங்கள் தெரிந்ததே.

இந்த 'வரிசை'யில் புதிய தகவல் இப்பொழுது கிடைத்துள்ளது

இக்கல்லூரி வாசிகசாலைக்குச் சொந்தமான - காணுமற்போன ஆங்கில நூல்கள் குருநாகலையில் விற்பனை செய்யப்பட்டு சிலர் பணம் கொடுத்து வாங்கியும் உள்ளனர்.

இதுசம்பந்தமாக இப்பொழுது சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் தகவல் அனுப்பப்பட்டுள்ளதாம்.

°° °° °°

யாழ் நகரிலுள்ள முனியப்பர் கோவில் பக்திக்குப் பெயர் போனது. அன்று; வெள்ளிக்கிழமைகளில் மட்டும் அடியார்கள் பலரைக் கண்ட இக்கோவிலில் இப்பொழுது தினமும் பக்தர்களைக் காணலாம்.

இதற்கிடையே; கடந்த சில காலமாக இரவு வேளைகளில், இப்பகுதியில் எழுத்தில் வடிக்க முடியாத பஞ்சமாபாதகங்கள் 'கொடி' கட்டி நடப்பதாக பார்த்தவர்கள் வாய் கூசிக் கூறுகின்றுர்கள்!

இதற்குச் சிகரம் வைப்பதுபோல இப்பகுதியில்தான் கடந்த வார இறுதியில் அடுத்தடுத்து இரண்டு சம்பவங்கள் இரவு வேளையில் நிகழ்ந்திருக்கின்றன!

இவற்றை ஒழிக்க யாழ் மாநகரசபை எதுவும் செய்ய முடியாதா?

கோவில் பகுதியைச் சுற்றி இரவு நேரத்தில் ஒளி பாய்ச்சி புனிதத்தை பாதுகாக்கலாம் அல்லவா? நகரபிதாவுக்கு இது சமர்ப்பனம்!

— ஊடுருவி

## யாழ். மத்திய பஸ்நிலையத்தில்

# பிரயாணிகளுக்கு ஏற்பட்ட அனுபவம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தின் உயர் அதிகாரிகளின் கடமை அசிரத்தையினுல் சுமார் இருபது நீண்ட தூரப் பிரயாணிகள், சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை பஸ் வண்டிக்காகக் காத்து நின்று தனியார் பஸ் வண்டியில் பிரயாணஞ்செய்த சம்பவம் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது.

இது பற்றிக் கூற படுவதாவது:

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வழமை போல் திருகோணமலைக்குப் புறப்படும் பஸ் வண்டிக்காகச் சுமார் 20 பிரயாணிகள் காத்து நின்றனர். பஸ்நிலைய அதிகாரிகளும் பஸ் வண்டி வரும்வருமெனக் கூறிக்கொண்டேயிருந்தனர். நேர அட்டவணைக்குப் பின்னரும் கியூ வரிசையில் நின்ற பிரயாணிகளுக்குக் கால்கடுக்கத் தொடங்கிவிட்டது.

ஆத்திரம் கொண்ட பஸ் பிரயாணிகள், பஸ் நிலைய உயர் அதிகாரிகளை விசாரணை செய்தனர். கோண்டாவில் சாலையிலிருந்த அதிகாரியுடன் பஸ்நிலைய அதிகாரி தொலைபேசியில் தொடர்புகொண்ட பொழுதுதான் அந்தச் சேவை ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்ற உண்மை தெரியவந்தது. இந்த பஸ் வண்டிக்குப் பின்னர் திருகோணமலைக்கு வேறு பஸ் வண்டி இல்லாததால் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் சேவையை நம்பிக் கியூ வரிசையில் மணிக்கணக்கணக்காகக் காத்துநின்ற பிரயாணிகள் தனிப்பட்ட மினிபஸ் வண்டியொன்றை ஒழுங்குசெய்து புறப்பட்டனர் ஏமாற்றமடைந்த பிரயாணிகள் இது பற்றி வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் தலைவருக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

# ஜனநாயக...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மனிதாபிமான அடிப்படையில் தீர்த்துவைக்கப்பட வேண்டும்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கத்துக்கு எதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை பற்றி திரு கே.கிருஷ்ணமூர்த்தி கருத்து வெளியிடுகையில்

"இலங்கை எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவரப்படவிருப்பதாக பத்திரிகைகள் மூலம் அறிந்தேன். ஜனுதிபதி ஆட்சி அல்லது ஜனநாயக ஆட்சி நடைபெறும் எந்த ஒரு நாட்டிலும் இப்படி ஒரு பிரேரணை எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டதாக நான் அறிந்ததில்லை. மிகவும் விந்தையானது" என்று கூறினுர்

திரு. கே. கிருஸ்ணமூர்த்தி. பொதுநல அரசுக் கருத்தரங்கில் கலந்துகொண்ட இந்தியக் குழுவின் தலைவராவர். "முக்கிவாகினி" எனும் தெலுங்கு (அரசியல்) சஞ்சிகையின் ஸ்தாபகரும் ஆசிரியருமாவர்,

# சீன-எல்லை...

[1-ம் பக்கத்தொடர்ச்சி)

சீன வெளிநாட் மைச்சர் திரு குவா-குவாங் இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. நரசிம்மராவுடன் இறுதிப் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுச் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு விஜயஞ்செய்யவுள்ளார்

சீனுவிற்கு விஜயஞ்செய்யுமாறு வெளிநாட்டு அமைச்சர் திரு குவா-குவாங் விடுத்த அழைப்பை பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி ஏற்றுக்கொண்டார். (வெ]

# பஸ்·மோட்டார்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ் பெரியாஸ்பத்திரியில் நோய்வாய்ப்பட்டிருந்த தனது சகோதரியைப் பார்ப்பதற்காக மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும் போதே பஸ்ஸுடன் மோதிப் பலியானுர்.

மல்லாகம் பதில் மாவட்ட நீதிபதி திரு. ஜி. வி. பாலசிங்கம் ஸ்தலத்தில் விசாரணை நடத்தியதைத் தொடர்ந்து இம்மாதம் 30ந் திகதி வரை பஸ் சாரதியான வி. என். சிவசுப்பிரமணியத்தை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சுன்னுகம் பொலிஸ் சார்ஜன்ட திரு. வி. வேலாயுதபிள்ளை சாட்சிகளை ஆஜர் செய்தார்,

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி செல்வி தர்மராணி காசிப்பிள்ளை, பிரேத பரிசோதனை நடத்தினுர்.

இவரின் மரணவிசாரணை, நாளை செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது. [மா]


## சிங்கப்பூரில் வேலை வாய்ப்பு

**ஆண்கள்**

தச்சுவேலைக்கு ஆட்கள் தேவை
பாஸ்போட்டுடன் நேரில் வரவும்

**பெண்கள்**

29-06-81 இன்று
30-06-81 நாளை
நேர்முகப் பரீட்சை

தட்டெழுத்து தொழிற்சாலையில்
வேலைபார்ப்பதற்கு பெண்கள் தேவை
வயது எல்லை 18—30
பாஸ்போட்டுடன் நேரில் வரவும்.

விபரங்கட்கு :

**சாகிப் ட்ரேட் சென்டர்**

[Sahib Trade Centre]

148, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

**HAKEEM TRADES**

63, Dam Street, Colombo--12
L/No. 363
0159


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலையம் அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Regd No. QB 100/36/81 P. O Box 49. Jaffna. தந்காலிக தொலைபேசி 7707 Registered as News Paper at the General Post Office, Sri Lanka